**இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் - 2023**

-----------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் (''நிறுவகம்'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில்,

நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 13 மற்றும் 26 ஆம் பந்திகளின் பிரகாரம் நிறுவகத்தினால் பயன்படுத்தப்பட்டு வரும் கொழும்பு மற்றும் அனுராதபுரத்தில் உள்ள இரண்டு காணிகளுக்கு நியாயமான பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்தக் காணிகளின் உரிமைத்துவத்தை நிறுவகத்தின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை அல்லது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் மேற்படி காணிகள் தொடர்பான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிமைத்துவமின்றி காணிகள் சொத்துக்களாக அங்கீகரிக்கப்பட முடியாது. | அந்த காணிகளின் உரிமைத்துவத்தை SLITHM இற்கு மாற்றுவதற்கும், காணியின் பெறுமதிகளை முன்கூட்டியே கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2014 ஆம் ஆண்டு முதல் அமைப்பின் பிழையான முறையில் உருவாக்கப்பட்ட ரூபா 1,452,439 ஆன செலுத்த வேண்டிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலததில் திருத்தப்படும். | பிழையைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

**பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 இல் தகவல் அமைப்பை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 3,771,216 செலவிடப்பட்ட போதிலும், நிறுவனத்தின் தேவைப்பாடுகளுடன் பொருந்தாத காரணத்தால் அது கைவிடப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியிலும் அப்பெறுமதியை நடைமுறை வேலை கணக்கிலிருந்து அகற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | கருத்துரை குறித்துக் கொள்ளப்பட்டது. | கணக்ககளில் சரியான சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 37,394,931 ஆகும். இருப்பினும், சுயாதீன கணிப்பிட்டின் பிரகாரம் அது ரூபா 33,197,432 ஆக இருந்தது. அதனால் ரூபா 4,197,499 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2024 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும்போது சரியான புள்ளிவிவரங்கள் மறுபரிசீலனை புள்ளிவிவரங்களின் கீழ் காட்டப்படும். | அதன் பிரகாரம் திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | நிதி நிலைமைக்கூற்று மற்றும் கணக்காய்விற்கு கொடுக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்படிருந்த அட்டுறு செலவுகளில் ரூபா 4,547,592 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. மேலும், அட்டுறு செலவினங்களில் மொத்தம் ரூபா 3,087,855 ஆனது 5 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்க்கப்படாமல் நிலுவையாக இருந்தது. | ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் திருத்தம் செய்யப்படும். | கணக்குகளை சரிசெய்து, ஏகப்பட்ட செலவுகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின நிதிக்கூற்றுக்களில் மொத்தம் ரூபா 19,241,195 ஆன அட்டுறு செலவுகள் அங்கீகரிக்கப்படவில்லை. அதனால் மிகை மற்றும் நடைமுறைப் பொறுப்புகள் அத்தொகையில் இருந்து குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. | குறித்துக் கொள்ளப்பட்டதுடன் திருத்தம் செய்யப்படும். | கணக்குகளில் அட்டுறு செலவுகளை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (உ) | 2023 திசெம்பர் 31 இல் ரூபா 7,012,825 தொகையான பௌதீக ரீதியாக | குறித்துக் கொள்ளப்பட்டது மற்றும் | சரியான நேரத்தில் பௌதீக |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிப்படுத்தப்பட்ட இருப்புக்களை இணக்கம் செய்வதற்கும் முரண்களை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாததுடன் இது நிதிக்கூற்றுக்களில் இருப்புப் பதிவின் நிலுவைகளுடன் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரியான செயன்முறையை பின்பற்றுவதற்கு நடடிக்கை எடுக்கபபடும். | நிலுவைகளை இணக்கம் செய்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2022 திசெம்பர் 31 இல் 238 எண்ணிக்கையான இருப்பு விடயங்களின் கிரயம் பௌதீக இருப்பு உறுதிப்படுத்தலின்போது அங்கீகரிக்கப்படவில்லை. அதனால் நிறுவனத்தின் நடைமுறைச் சொத்துக்கள் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், 2023 சனவரி 01 இன் தொடக்க நிலுவைத்தொகையில் அவற்றை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது மற்றும் மூன்றாம் தரப்பினரால் நிலையான சொத்து கணக்கெடுப்பு செயல்முறை முடிக்கப்பட்டதன் பின்னர் இப்பிரச்சினை தீர்க்கப்படும். | எதிர்காலத்தில் பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவரால் இருப்பு பெறுமதியிடல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்**

**பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.**

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | பெற வேண்டியவை | | | | | |
| i | SLTDA இடமிருந்து | 4,248,978 | 6,512,810 | 2,263,832 | AMC இன் பரிந்துரையின் பிரகாரம் , இந்த விடயம் தொடர்பாக SLTDA, SLTPB, SLTCB உடன் கலந்துரையாடப் பட்டுள்ளது. சமீபத்தில் திருத்தம் நடைபெற்று வருகின்றது | மீதிகள் காலரீதியாக கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டும். மேலும் வேறுபாடுகளைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| ii | SLTPB இடமிருந்து | 5,728,382 | 398,575 | 5,329,807 | | |
| iii | SLCB இடமிருந்து | 615,018 | 44,405 | 570,613 | | |
| iv | சுற்றுலா அபிவிருத்தி வரி மற்றும் குடியகல்வு வரி | 233,982,276 | 287,637,153 | 53,654,877 | SLTDA உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் கூற்றுக்களில் TDL & EL ஐ அங்கீகரித்தோம். | |

### 1.5.4 கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்படாத ஆவணச்சான்று

| விடயம் | பெறுமதி ரூபா | சமர்ப்பக்கப்படாத சான்று | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| STTANP வைப்புக்களின் கீழ் | 1,944,465 | பற்றுச்சீட்டுக்கள் மற்றும் ஏனைய மூல ஆவணங்கள் | வழங்கப்படவில்லை. | முறையான நடைமுறையைப் பின்பற்றி ஆவணச் சான்றிதழைச் சமர்ப்பிக்க அல்லது மீதியைப் பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

**பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 இல் சுற்றுலாப் பொலிஸ் பிரிவிடமிருந்து பெற வேண்டிய ரூபா 3,192,000 தொகையான வாடகை வருமானம் வருமானமாக இனங்காணப்பட்டு பெறவேண்டிய கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும், இந்தத் தொகையின் அறவிடும் தன்மை நிச்சயமற்றதாக இருந்தது. எனினும், அதற்கான நட்டக்கழிவு பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும், அவர்கள் வளாகத்தைப் பயன்படுத்துகின்ற போதிலும் 2015 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | AMC பரிந்துரையின்படி, 2013-2014 இற்கான வாடகை நிலுவை மற்றும் 2015-2022 இற்கான செலவுகளையும் அறவிடுவதற்காக கோரிக்கை கடிதம் SLTDA இற்கு அனுப்பப்பட்டுள்ளது. | கணக்குகளில் சரியான சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும் மற்றும் குறிப்பிட்ட விடயங்களை தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டுக்கான ரூபா 330,000 தொகையான வாடகை வருமானத்தை இலங்கை மாநாட்டு பணியகத்திடம் இருந்து நாளதுவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | SLCB யுடனான கலந்துரையாடலின் பின்னர் இப்பெறுமதியை தீர்ப்பதற்கு அவர்கள் உடன்பட்டிருந்தனர் | 2024 ஆம் ஆண்டில் வாடகை வருமான மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2020 ஆம் ஆண்டில் கோலா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திடமிருந்து பெற வேண்டிய மீதியான ரூபா 370,976 மீளாய்வாண்டின் இறுதியில் கூட அறவிடப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை இல்லை. | 2024 ஆம் ஆண்டில் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 16 வருட காலமாக SLTDA இடமிருந்து பெற வேண்டிய ரூபா 3,810,324 ஆன அட்டுறு செலவுகள் மீளாய்வாண்டின் இறுதியில் கூட அறவிடப்பட்டிருக்கவில்லை. | வெளிவாரிக் குழுவினால் தீர்மானம் எடுக்கப்பட்டதன் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் | 2024 ஆம் ஆண்டில் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | சலவைக் கடன்பட்டோரிடமிருந்து ரூபா 305,350 மற்றும் சமுத்ரா ஹோட்டல் கடன்பட்டோரிடமிருந்து ரூபா 25,678,878 ஆன பெற வேண்டியவைகள் மீளாய்வாண்டின் இறுதியில் கூட அறவிடப்பட்டிருக்கவில்லை. ரூபா 25,984,228 ஆன தொகை 24 மாதங்களுக்கும் மேலாக நிலுவையில் இருந்த போதிலும், மேற்படி பெற வேண்டிய நிலுவையில் நிதி அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளரிடமிருந்து ரூபா 4,068,000, பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து ரூபா 5,140,571, SLTDA இலிருந்து ரூபா .3,583,010 மற்றும் SLTPB இலிருந்து ரூபா 5,723,382 என்பன அடங்கி இருந்தன. | தற்போது அறவீட்டு செயல்முறை நடைபெற்று வருகின்றது. நிறுவனங்களுக்கு இடையே நீண்ட காலமாக நிலுவையில் உள்ள மீதிகள் தொடர்பில் சந்திப்புகள் இடம்பெற்று வருகின்றன. | நீண்டகால பெற வேண்டிய நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

.

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

**கீழே குறிப்பிடப்பட்டுள்ளஇணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்ததின் ii ஆம் பகுதியின் 5(1) ஆம் பந்தி | பணிக்கொடை கொடுப்பனவு ஓய்வு பெற்று ஒரு மாதத்திற்குள் செலுத்தப்பட வேண்டிய போதிலும் , 2023 இல் ஓய்வு பெற்ற இரண்டு அதிகாரிகளுக்குச் செலுத்த வேண்டிய மொத்தப் பணிக்கொடைத் தொகை ரூபா 2,192,482 கணக்காய்வுத் திகதியான 2024 ஏப்ரல் 24 வரையில் செலத்தப்படவில்லை. | கருத்துரை இல்லை. | பணிக்கொடை கொடுப்பனவு ஓய்வு பெற்று ஒரு மாதத்திற்குள் செலுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான (SOE) செயற்பாட்டு கையேட்டின 6.7 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் இறுதியில் வருடாந்த சொத்துக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வில்லை மற்றும் நாளதுவரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்துரை இல்லை. | வருடாந்த சொத்துக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான கூட்டுறவு நல்லாளுகைக்கான வழிகாட்டியின் 2.3 ஆம் பந்தி | 2020-2023 வரையிலான நான்கு வருட காலத்திற்கு இந்த நிறுவனத்திற்கான மூலோபாய திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த துடன் அது நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | கருத்துரை இல்லை. | மூலோபாய திட்டமொன்று நாளதுவரையாக் கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 417,479,936 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 125,872,269 ஆக காணப்பட்டது. ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 291,607,667 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. குடியகல்வு வரி வருமானம் ரூபா 210,270,982 ஆல் அதிகரித்தமை மற்றும் சுற்றுலா அபிவிருத்தி வரி ரூபா 38,098,576 ஆல் அதிகரித்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின்போது சமுத்ரா ஹோட்டலுக்கான சந்தைப்படுத்தல் திட்டத்திற்கான தயாரிப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை. மேலும் கொள்ளுப்பிட்டியின் முக்கிய புள்ளியொன்றில் கடல் காட்சிகளுடன் கூடிய 10 எண்ணிக்கையான அறைகள் காணப்பட்ட போதிலும், சமுத்ரா ஹோட்டலில் அறைகளின் வசதிகள் மற்றும் சௌகரியம் என்பன திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை. | தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சமுத்ரா ஹோட்டலுக்கான சந்தைப்படுத்தல் திட்டமொனறு தயாரிக்கப்பட வேண்டும் மற்றும் அறைகளின் வசதிகள் மற்றும் சௌகரியம் என்பன மேம்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சமுத்ரா ஹோட்டலில் வருடாந்தம் 4,380 இரவு அறைகளை வழங்குவதற்கான வசதிகள் காணப்பட்டன. இருந்த போதிலும் 494 இரவு அறைகள் மட்டுமே பயன்படுத்தப்படடிருந்தன, அதாவது மொத்தத்தில் 11 சதவீதமாகும். எனவே, சமுத்ரா ஹோட்டலை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பழுதுபார்த்தல் பணிகள் 2023 ஆம் ஆண்டில் நிறைவடைந்தது. | ஹோட்டலை பொருளாதார ரீதியாகவும் திறமையாகவும் பயன்படுத்தி வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் சமுத்ரா உணவகத்தை புனரமைப்பிற்காக முறையான கிரய நலன் பகுப்பாய்வின்றி ரூபா 5,841,912 செலவிடப்பட்டது. இருப்பினும், சமுத்ரா உணவகத்தின் திட்டமிட்ட செயல்பாடு நாளதுவரை நிறுவனத்தால் தொடங்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்டது. திட்டமிட்ட செயல்பாடு இந்த ஆண்டில் தொடங்கப்படும். | திட்டமிட்ட செயல்பாடு முன்கூட்டியே தொடங்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் ஹோட்டல் பாடசாலையின் பல்வேறு கற்கைநெறிகளுக்கு பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 11,788 ஆக இருந்ததுடன் 5,912 விண்ணப்பதாரர்கள் அல்லது 50 சதவீத விண்ணப்பதாரர்கள் கற்கைநெறிகளுக்கு பதிவு செய்யப்பட்டிருந்தனர். வகுப்பறைகளுக்கான இடப்பற்றாக்குறையே இந்நிலைமைக்கு முக்கிய காரணம் என்பது கணக்காய்வின்போது அவதானிக்கப் பட்டது. இருப்பினும், தீர்வொன்றை இனங்கண்டு அதிக கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நிறுவனத்தின் நிர்வாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.மேலும், கிராமப்புறங்களில் உள்ள ஹோட்டல் பாடசாலைக் கிளைகளுக்கு அந்த வகுப்பறைகளில் முழுமையாக இடமளிக்கும் வகையில் விடுதி வசதிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வார நாள் மற்றும் வார இறுதி கற்கைநெறிகள் எனப் பல்வேறு நிறுவனங்களால் கோரப்படும் சில கற்கைநெறிகள் எமது நிறுவனத்தில் உள்ள விரிவுரையாளர்களால் எமது நிறுவனத்தில் உள்ள இடத்தை அதிகபட்சமாகப் பயன்படுத்தி, அவர்களது நிறுவன வளாகத்திற்குள் நடாத்தப்படுகின்றன. எமது நிறுவனத்தினால் நடாத்தப்படும் பிரதான பாடநெறிகளுக்கு மேலதிகமாக குறுகிய கால பாடநெறிகளை அறிமுகப்படுத்தி பிராந்திய பாடசாலைகளுக்கு தேவையான பௌதீக வளங்களை வழங்கி எமது நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதற்காக செயற்பட்டு வருகின்றோம். | விடுதிகள் உள்ளிட்ட திறன் மேம்பாட்டுடன் பாடசாலையின் வசதிகளை மேம்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2008 ஆம் ஆண்டு முதல் சமுத்ரா ஹோட்டலின் சேவைக் கட்டணத்தில் உபகரணங்களின் சேதங்களை ஈடுசெய்வதற்கு 2 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், | கருத்துரை இல்லை. | சமுத்ரா ஹோட்டலின் சேவைக் கட்டணத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு உபகரணங்களின் சேதங்களை |

| | | | |
|---|---|---|---|
| | 2018 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 546,689 ஆன நிலுவைத் தொகை மீளாய்வாண்டின் இறுதியில் கூட மாற்றமின்றி காணப்பட்டது. | | ஈடுசெய்வதற்கு பயன்படுத்தப்பட வேண்டும் |
| (ஊ) | முன்னைய ஆண்டு சலவை வருமானத்துடன் ஒப்பிடுகையில் சமுத்ரா சலவையின் விற்பனைக்கிரயம் 12.76% ஆல் அதிகரித்துள்ளது. இதனால் சலவைத் துறையின் மொத்த இலாப விகிதம் 18.76% ஆல் குறைந்துள்ளது. நேரடி விலை உயர்வுக்கு எதிராக சலவை விலையை மாற்றியமைக்காமையே இதற்கு முக்கிய காரணமாகும். மேலும், முன்னைய ஆண்டில் சலவைத் துறை ரூபா 1.9 மில்லியன் மிகையொன்றைப் பதிவு செய்திருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 459,607 பற்றாக்குறையொன்றைப் பதிவு செய்திருந்ததுடன் செலவைக் குறைப்பது தொடர்பாக கருத்திற் கொள்ளாமை மற்றும் சலவை வருமானத்தை மீளாய்வு செய்யாமை இதற்கான முக்கிய காரணங்களாக இருந்தன. | தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் மற்றும் கட்டணத் திருத்தம் நிர்வாக சபையால் அங்கீகரிக்கப்பட்டு 2024 மே மாதம் முதல் செயல்படுத்தப்பட்டது. | கட்டணத்தை திருத்துவதற்கும் செலவைக் குறைப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | வங்கி கணக்கு இலக்கம் 0007120156 இல் 2023 பெப்ரவரி முதல் நவம்பர் வரை காணப்பட்ட ரூபா 1,842,398 ஆன இனங்காணப்படாத நேரடி வைப்புத்தொகை மீளாய்வாண்டின் இறுதியில் கூட அங்கீகரிக்கப்பட்டு காசேட்டில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | இனங்காணப்படாத நேரடி வைப்புகள் கூடிய விரைவில் அங்கீகரிக்கப்பட வேண்டும் |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமுத்ரா ஹோட்டலின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 27 ஆக இருந்த போதிலும், தற்போது 19 ஊழியர்கள் உள்ளனர். எனவே, 08 எண்ணிக்கையான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நாளதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்டது. முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் வெற்றிடங்களுக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்காமல், ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு முரணாக , 2023 அக்டோபர் 26 ஆம் திகதிய பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் சமுத்ரா ஹோட்டலின் செயல்பாடுகளை நிர்வகிப்பதற்கு வருகை தரும் விரிவுரையாளராக ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்படடிருந்ததுடன் , 2023 நவம்பா மற்றும், திசெம்பர் மற்றும் 2024 ஜனவரி மாதங்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூபா 1000 வீதம் செலுத்தப்பட்டிருந்தது. இது பணிப்பாளர் சபையினால் 2024 ஜனவரி இல் ஒரு மணி நேரத்திற்கு ரூபா 1800 வீதம் அதிகரிக்கப்பட்டிருந்தது. அதனால், 2024 பெப்ரவரியில் ரூபா 373,816 மற்றும் 2023 மார்சசில் ரூபா 300,000 அவருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்பட்டது. நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் | நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்காமல், சலவை மற்றும் விரிவுரைகளை மேற்பார்வையிடுவதற்காக வருகை தரும் விரிவுரையாளர் பிரிவின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூபா 500 வீதம் ஒரு நாளைக்கு அதிகபட்சம் 6 மணிநேரத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், சபையின் அங்கீகாரத்தின் கீழ் அதிகபட்ச மாதாநத உச்சவரம்பு ரூபா 300,000 வரையாக˙ இந்த மணிநேர வீதம் ரூபா 3100 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதனால் 2024 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் அவருக்கு ரூபா 300,000 வீதம் செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 வாகனத்தொகுதி முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 ஆம் ஆண்டில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கையளிக்கப்பட்ட ரூபா 860,000 பெறுமதியான வாகனத்தை மீளாய்வாண்டின் இறுதியில் கணக்காய்வின்போது பௌதீக ரீதியாக உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | கருத்துரை இல்லை. | தொடர்புடைய ஆவணங்கள் முன்கூட்டியே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |